## பச்சைப் பொய்யைச் சொல்கிறார்! ஒன்றிய அமைச்சர்

# அமித்ஷா - அம்பேத்கரை விமர்சித்தபோது ஆளுநர் எங்கே போனார்?

## உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி.செழியன் கேள்வி!



சென்னை, ஏப். 15 –

**ஆளுநர் ஆர்.என்.ரவி பச்சை பொய்யைச் சொல்கிறார் என்றும் ஒன்றிய அமைச்சர் அமித்ஷா அம்பேத்கரை விமர்சித்தபோது ஆளுநர் எங்கே போனார் என்றும் உயர் கல்வித் தறை அமைச்சர் கோவி.செழியன் அறிக்கையில் கேள்வி கேட்டுள்ளார்.**

இது குறித்து அமைச்சர் கோவி. செழியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு: –

மிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்படும் மசோதாக்களை எல்லாம் பல மாதங்களாகக் கிடப்பில் போட்ட ஆளுநருக்கு உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பு இந்தியா முழுவதும் பேசப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக மசோதாக்கள் மீது நடவடிக்கை எடுக்க ஜனாதிபதிக்கும் 3 மாதம் காலக்கெடு நிர்ணயித்து உத்தரவிட்டிருக்கிறது உச்ச நீதிமன்றம்.

இந்த வடுக்களை எல்லாம் தாங்கிக் கொள்ள முடியாமல், வழக்கு போட்டு வென்ற தமிழக அரசுக்கு எதிராக வழக்கம் போல ஓலமிட்டிருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. அம்பேத்கரின் பிறந்தநாள் விழாவில் பேசிய ஆளுநர் ரவி, அபத்தமான கருத்துகளை வெளியிட்டிருக்கிறார்.

### பச்சை பொய்யைச் சொல்லும் ஆளுநர்!

“சமூக நீதி குறித்துப் பேசும் இந்த மாநிலத்தில் செருப்பு போட்டுச் செல்வதற்காகவும், இரு சக்கர வாகனத்திற்காகவும் தலித்துகள் தாக்கப்படுகின்றனர்” என பச்சை பொய்யை சொல்லியிருக்கிறார் ஆளுநர். ’பட்டியல் சாதியினருக்கு எதிரான குற்றங்களில் பீகார் இரண்டாவது இடத்தில் இருக்கிறது’ எனத் தேசியப் பட்டியல் சாதியினருக்கான ஆணையத்தின் (NCSC) தலைவர் விஜய் சாம்ப்லா 2023ல் சொன்னார். ஆளுநர் அவர்களே உங்கள் சொந்த மாநிலத்தில் இப்படி அநீதி நடந்து கொண்டிருக்கும் போது தமிழ்நாட்டைப் பற்றிப் பேச உங்களுக்குத் தகுதி இருக்கிறதா? பீகாரில் பாஜக தயவில் தான் ஆட்சி நடக்கிறது. அதைக் கண்டித்துப் பேச முடியுமா உங்களால்!

அம்பேத்கரை பற்றியெல்லாம் உருகிப் பேசியிருக்கிறீர்கள். ”அனைவரும் ஒன்று, அனைவரும் சமம் என்பதைத் தான் சனாதன தர்மம் கூறுகிறது” என சனாதனத்திற்கு பிராண்ட் அம்பாசிடராக பேசிக் கொண்டிருக்கும் நீங்கள், சனாதனத்தை எதிர்த்த அம்பேத்கரை புகழ்வது பொருத்தமாகவா இருக்கிறது! சனாதனம் போதித்த சாதியால் ஏற்பட்ட இழிவுகளை அகற்றத்தானே அம்பேத்கர் போராடினார். இனிப்பும் உப்பு எப்படி ஒரே சுவை தர முடியும்? சனாதனத்தைத் தூக்கிப் பிடித்துக் கொண்டே பட்டியலின மக்களைப் பற்றிக் கவலைப்படுகிறீர்களே! உங்களின் டபுள் ரோல் நடிப்பு தமிழ்நாட்டில் எடுபடாது.

### உத்தரப்பிரதேசத்தில் அதிக அளவில் பட்டியலினத்தவர் தாக்குதல்!

நாடு முழுவதும் பட்டியல் மற்றும் பழங்குடியினத்தவர் மீதான வன்கொடுமைகளில் 97.7 விழுக்காடு வழக்குகள் உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான் உள்ளிட்ட 13 மாநிலங்களில்தான் பதிவாகியிருக்கின்றன என ஒன்றிய அரசின் அறிக்கை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. 2024ஆம் ஆண்டில் பட்டியலினத்தவர் மற்றும் பழங்குடியினத்தவர் மீதான வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவான வழக்குகள் குறித்த ஒன்றிய அரசு வெளியிட்ட அறிக்கையின் படி, நாடு முழுவதும் பட்டியலின மக்கள் மீதான தாக்குதல் குறித்து 51,656 வழக்குகள் பதிவாகியுள்ளன. இதில், 12,287 வழக்குகள் உத்தரப் பிரதேசத்தில் பதிவாகியிருக்கிறது. இது, மொத்தம் பதிவான வற்றில் 23.78 விழுக்காடு ஆகும்.

உத்தரப் பிரதேசத்திற்கு அடுத்த இடத்தில் ராஜஸ்தானில் 8,651 வழக்குகளும் மத்தியப் பிரதேசத்தில் 7,732 வழக்குகளும் பீகாரில் 1,799 வழக்குகளும் பதிவாகியுள்ளன. அதற்கு அடுத்த இடங்களில் ஒடிசாவில் 6.93 விழுக்காடும் மகாராஷ்டிராவில் 5.24 விழுக்காடும் வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்த 6 மாநிலங்களில் மட்டும் 81 விழுக்காடு வழக்குகள் பதிவாகியுள்ளன. இந்த ஆறு மாநிலங்களிலும் பாஜக ஆட்சியில் உள்ளது. தமிழ்நாட்டில் 3 விழுக்காடு வழக்குகளே பதிவானது.

### மாநில அரசுக்கு குடைச்சல் கொடுக்கிறார்!

நாட்டிலேயே பட்டியலின மக்களுக்கு அதிக அளவில் வன்முறைகளும் கொடுமைகளும் நடைபெறுவது பாஜக ஆளும் மாநிலங்களில்தான் என்பதை ஒன்றிய அரசின் தரவுகளே சொல்கின்றன. சாதிக் கொடுமைகளுக்கு அடிப்படையான மனுநீதியை உயர்த்திப் பிடிக்கும் சனாதனி ஆளுநர் ஆர்.என்.ரவி, சாதிக்கொடுமைகளுக்கு எதிராகப் போராடும் சமூகநீதி மாநிலத்தில் நீலிக்கண்ணீர் சிந்துகிறார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஜனநாயக முறையில் செயலாற்றி வரும் மாநில அரசுக்குக் குடைச்சலைக் கொடுக்கிறார். உச்ச நீதிமன்றம் ஓங்கிக் குட்டிய பிறகும் அந்த அவமானத்தைத் துடைக்க அவதூறுகளை அள்ளி வீசுகிறார். ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுவதைப் போல் பட்டியலின மக்கள் மீது கரிசனத்தைக் கொட்டுகிறார்.

உங்களை ஆளுநராக நியமித்த ஒன்றிய உள் துறை அமைச்சர் அமித்ஷா அம்பேத்கரை பற்றிச் சொன்னது உங்களுக்கு நினைவில் இருக்கிறதா ஆளுநரே! “இந்தக் காலத்தில் அம்பேத்கர், அம்பேத்கர், அம்பேத்கர்... என அவரின் பெயரைக் கோஷமிடுவது பேஷனாகிவிட்டது. இத்தனை முறை அம்பேத்கர் பெயரைக் கூறியதற்குப் பகவானின் பெயரைக் கூறியிருந்தால் அவர்களுக்குச் சொர்க்கத்திலாவது இடம் கிடைத்திருக்கும்” என அமித்ஷா நாடாளுமன்றத்தில் சொன்ன போது நாடு முழுவதும் கொந்தளிப்பு எழுந்தது.

”அம்பேத்கர் தலித் தலைவர் அல்ல; அவர் பாரதத் தாயின் மகன்” என இன்றைக்குச் சொல்லும் ஆளுநர் அவர்களே.. அமித்ஷா சொன்ன போது ராஜ்பவனின் தர்பார் மண்டபத்தில் ஒரு கண்டன கூட்டத்தை ஏன் நடத்தவில்லை? அமித்ஷா சொல்வது போல உங்களுக்கும் அம்பேத்கர் பெயரைக் கோஷமிடுவது பேஷனாகி விட்டதா?

ஆரியம் பேசும் நீங்கள் அம்பேத்கரை போற்றி பாடுகிறீர்கள். அம்பேத்கரை பற்றிப் பேசவோ திராவிடத்தைத் தூற்றவோ உங்களுக்கு எந்தத் தகுதியும் கிடையாது.

இவ்வாறு அமைச்சர் கோவி.செழியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.





அண்ணல் டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் ஆவடி திருமுல்லைவாயில் பகுதியில் மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் ஆவடி சாமு.நாசர் தலைமையில் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அன்னதானம் வழங்கி சமத்துவ உறுதிமொழி ஏற்றினார். உடன் சண்பிரகாஷ், மேயர் உதயகுமார், பேபி சேகர், சி.ஜெரால்டு, ஜி.விமல் வர்சன், அமுதா பேபி சேகர், ஜி.நாராயண பிரசாத், பொன் விஜயன் மற்றும் மாவட்ட கழக மாநகர கழக, பகுதி – வட்டக் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் இருந்தனர்.

## திரு.வி.க. நகர் தொகுதியில்

# டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள் விழா!

## ப.தாயகம்கவி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை,ஏப்.15–

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணையேற்று டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளையொட்டி,கழக துணை அமைப்புச்செயலாளர், திருவிக நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி திருவிக நகர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள சட்டமன்ற அலுவலகத்தில் டாக்டர் அம்பேத்கர் திருவுருவப் படத்திற்கும், டிகாஸ்டர் சாலையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கும் மலர் தூவி மரியாதை செலுத்தி, சமத்துவ நாள் உறுதிமொழியை ஏற்று கொண்டார். அதனைத் தொடர்ந்து இனிப்பு,மோர், தர்பூசணி ஆகியவற்றை பொதுமக்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் 72வது வார்டு மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் மு.சரவணன்,

72வது வட்ட அவைத்தலைவர் வேலு,

வட்ட துணை செயலாளர் சிவக்குமார்,

வட்ட துணை செயலாளர் ஆசை ராஜேந்திரன், வட்ட பொருளாளர் வி.கே.ஆர்.ஜெகதீசன், பகுதி பிரதிநிதி மோகன், 73வது வட்ட துணை செயலாளர் சுரேன்,

வடக்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் வழக்கறிஞர்.அரவிந்தன்,

பகுதி தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ஸ்டீபன் டிசில்வா,BLA2 பாபு மற்றும் அப்பகுதியை இளைஞர் கள்ஜி.வி.ராஜ்குமார், நூர் பாய், ஜோன்ஸ், அரவிந்த், சிவா, ராகுல், முன்னா,விஷ்வா, ரமேஷ், பிரகாஷ், மோகன், முருகன், வீரப்பன், ஏ.வி. வில்லியம்ஸ்ஆகியோர் பங்கேற்றனர்.

## அண்ணல் அம்பேத்கரின் 135-வது பிறந்தநாள்

# எழும்பூரில் சமத்துவ நாள் விழா - 1,500 பேருக்கு அறுசுவை உணவு!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஏப்.15

தீண்டாமை, சாதிய இழிவு ஆகியவற்றுக்கு எதிராகவும் ஒதுக்கப்பட்ட மக்களின் உரிமை, ஒடுக்கப்பட்ட மக்களின் சமத்துவத்திற்காகவும் போராடிய அண்ணல் டாக்டர் அம்பேத்கரின் 135வது பிறந்த நாளை, “சமத்துவ நாள்” உறுதிமொழி ஏற்றுக் கொண்டாடுமாறு கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியிருப்பதற்கு இணங்க, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில், எழும்பூர் தொகுதியில் நான்கு இடங்களில் சமத்துவ நாள் விழாவாகக் கொண்டாடப்பட்டது.

108 ‘அ’ வட்டம், சேத்துப்பட்டு, அம்பேத்கர் திடல் அருகில்; 108வது வட்டம், சேத்துப்பட்டு, வைத்தியநாதன் சாலை; 99 ‘அ’ வட்டம், பிரிக்ளின் சாலை, திடீர் நகர் அருகில், 77வது வட்டம், புளியந்தோப்பு, டிமலஸ் சாலை ஆகிய நான்கு இடங்களில் நடந்த நிகழ்ச்சிகளில் ஏராளமான பகுதி மக்களும் எழும்பூர் தொகுதியைச் சேர்ந்த கழக நிர்வாகிகளும் செயல்வீரர்களும் பங்கேற்று சமத்துவ நாள் உறுதிமொழியை ஏற்றனர். மேலும், இந்நான்கு இடங்களிலும் 1,500 பேருக்கு இனிப்புடன் கூடிய அறுசுவை மதியை உணவைச் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் வழங்கினார்.

இந்நிகழ்வுகளில் எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ.விஜயகுமார், முன்னாள் வட்டச் செயலாளர் புருஷோத்தமன், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் ந.கலையரசன், அவைத் தலைவர்கள் வெ.மருதன், விஸ்வநாதன்; மாவட்டப் பிரதிநிதிகள் கமலக்கண்ணன், மா.காந்தி; 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் ரா.வெற்றிவேல், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் ஜெ.சிலம்பரசன், எல்.சுகுமாரன்; 108 ‘அ’ வட்ட இளைஞரணி அமைப்பாளர் சதீஷ், 108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ்குமார், 108வது வட்டத் துணைச் செயலாளர் ஜெ.இந்திரா காந்தி, 77 ‘அ’ வட்டத் துணைச் செயலாளர் ஆர்.ஆரோக்கியம், எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்துலெட்சுமி, பகுதிப் பிரதிநிதி வா.சிவகுமார், வட்டச் செயற்குழு உறுப்பினர் பிரவீன்குமார், பாக முகவர்கள் பா.ஆனந்த், செந்தில், கவிதா, கார்த்திகேயன் மற்றும் மு.வினோத், எம்.ரமேஷ், ஆர்.வேலு, பத்மநாபன், சிவா, சிம்பு எனும் பிரதாப், ஐசக், யாகப், யூசுப், விஜயகுமார், இஸ்ரேல், நாகய்யா, பாண்டியன், கோவிந்தன், எழும்பூர் எம்.கணேசன், ஏழுமலை, முனுசாமி, எட்வின், சீனிவாசன், புல்லாபுரம் பிரசாத், கோமகன், முத்து, கே.பி.பார்க் சதீஷ், நாகராஜ், இரவி, ஏழுமலை, எழிலரசி உள்ளிட்ட கழக நிர்வாகிகளும், செயல்வீரர்களும் கலந்து கொண்டனர்.



புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 52வது வட்டத்தில் வட்டசெயலாளர் எஸ்.புகழேந்தி முன்னிலையில் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, வ.பெ.சுரேஷ், ந.மனோகரன், நாகம்மை கருப்பையா, கட்பீஸ் சோமசுந்தரமூர்த்தி, ஜெ.கௌரீஸ்வரன், கொரியர் முருகன், எம்.எல்.ரவி, பாலலட்சுமணன், லாரன்ஸ், மலர், இளங்கோவன், பன்னீர்செல்வம், கார்த்திகேயன், வினோத்குமார், கயல்விழி, சுரேகா, அரிகிருஷ்ணன், தனஞ்செழியன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றியூர் மத்திய பகுதி செயலாளரும் இரண்டாவது மண்டலக்குழு தலைவருமான ஏ.வி. ஆறுமுகம் ஏற்பாட்டில், மாவட்ட கழக செயலாளரும் மாதவரம் சட்டமன்றம் உறுப்பினருமான மாதவரம் எஸ். சுதர்சனம் தலைமையேற்று கோடை வெயிலின் தாக்கத்தை போக்கும் வகையில் பொதுமக்களுக்கு பழங்கள் குளிர்பானங்கள் மற்றும் நீர் மோர் வழங்கி நீர் மோர் பந்தலை திறந்து வைத்தார் இந்நிகழ்ச்சியில சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார் உள்ளிட்ட அனைத்து கழகத்தினர் கலந்து கொண்டனர்.

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றுகிறார்!

# குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், ஏப்.15 -

குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் விடுத் துள்ள அறிக்கை வருமாறு:-

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் படப்பை தில்லை மஹாலில் அவைத்தலைவர் மு.சுப்பிரமணி அவர்கள் தலைமையில், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயலாளர் - குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் சிறப்புரையாற்றிட திருபெரும்புதூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் மீஞ்சூர் கே.ஜீ.பாஸ்கர்சுந்தரம் ஒன்றிய குழுத்தலைவர் திருமதி. சரஸ்வதி மனோகரன் ஒன்றிய கழக நிர்வாகி கள் வ.நந்தகோபால், ஏ.மணி, வாசுகி மகேஷ், சி.பார்த்தசாரதி, வி.அரி, மு.ராஜேந்திரன், மா.பரிமேலழகன் ஆகியோர் முன்னிலையில் இன்று (15.04.2025 - செவ்வாய்கிழமை ) மாலை 4.00 மணியளவில் நடை பெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஒன்றிய அணி களின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள் ஒன்றிய பிரதிநிதிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் சிறப்பு அழைப்பாளர்கள் உள்ளிட்ட அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. ஏப்ரல் 19 முதல்வர் குன்றத்தூர் வருகை

2. சட்டமன்ற தேர்தல் 2026

3. கழக வளர்ச்சி

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## திருவொற்றியூர் கிழக்குப் பகுதி

# 8-வது வார்டில் தண்ணீர் பந்தல்!

## பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு திறந்து வைத்தார்!

சென்னை, ஏப்.15-

முதலமைச்சர் கழக தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி சென்னை வட கிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின் படி 13.4.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11 மணியளவில் சென்னை வட கிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்குப் பகுதி 8வது வார்டு எஸ்.பி. கோயில் தெருவில் அமைந்துள்ள, டி.சண்முகனார் நினைவு இரவு பள்ளியில் கோடை வெயிலில் இருந்து பொதுமக்களின் தாகம் தீர்க்க தண்ணீர் பந்தல் திறக்கும் நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு திறக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மோர், தர்பூசணி, பழம், வெள்ளரிக்காய், தயிர் போன்றவற்றை திருவொற்றியூர் மாநகராட்சி மண்டல குழு தலைவர் கிழக்கு பகுதி செயலாளர் தி.மு.தனியரசு வழங்கினார்.

இதில் திருவொற்றியூர் கிழக்குப் பகுதி துணை செயலாளர் எம்.வி.குமார், பொருளாளர் இரா.குமரேசன், வட்ட கழக செயலாளர் டி.சி.வி.மணிகண்டன், வட்ட அவைத் தலைவர் சுப்பிரமணியன், வட்ட துணை செயலாளர் எம்.கணேசன், சின்ன பாப்பா, வட்ட பிரதிநிதி முனுசாமி, மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர் சுகந்தா முனுசாமி, பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் சுந்தரி, மாவட்ட தொண்டர் அணி துணை தலைவர் சி.சரவணன், சி.புவியரசன், பாரதிநகர் செல்வ பாண்டியன் மற்றும் கழக தோழர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அமைச்சர் தா.மோ.அன்பரசன் – இ.கருணாநிதி எம்.எல்.ஏ – எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

# செம்பாக்கம் வடக்கு பகுதிக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் அறிக்கை!

காஞ்சிபுரம், ஏப். 15 -

செம்பாக்கம் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், தாம்பரம் மாநகரம், செம்பாக்கம் வடக்குப் பகுதி தி.மு.க. செயற்குழுக் கூட்டம் இன்று (15.04.2025 – செவ்வாய்க்கிழமை) மாலை 6:30 மணிக்கு, ராமசாமி தெரு, ஜே.எஸ்.வி. மஹாலில் பகுதிக் கழக அவைத் தலைவர் ஏ.வீரபத்திரன் தலைமையில் பகுதிக் கழக நிர்வாகிகள் முன்னிலையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் தா.மோ.அன்பரசன், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகரச் செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகின்றனர்.

எனவே இக்கூட்டத்தில் பகுதிக்குட்பட்ட மாநில, மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், நிர்வாகிகள், பி.எல்.ஏ.2 பாக முகவர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள்: -

19.4.2025 அன்று குன்றத்தூர் ஒன்றியத்திற்கு கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் வருகை சம்பந்தமாகவும் மற்றும் கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு செம்பாக்கம் வடக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஏ.கே.கருணாகரன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.





கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் ஆணையேற்று டாக்டர் அம்பேத்கர் அவர்களின் பிறந்த நாளையொட்டி,கழக துணை அமைப்புச்செயலாளர், திருவிக நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ப.தாயகம்கவி திருவிக நகர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள சட்டமன்ற அலுவலகத்தில் டாக்டர் அம்பேத்கர் திருவுருவப் படத்திற்கும், டிகாஸ்டர் சாலையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கும் மலர் தூவி மரியாதை செலுத்தி, சமத்துவ நாள் உறுதிமொழியை ஏற்று கொண்டார். அதனைத் தொடர்ந்து இனிப்பு,மோர், தர்பூசணி ஆகியவற்றை பொதுமக்களுக்கு வழங்கினார்.



அண்ணல் அம்பேத்கர் அவர்களின்135வது பிறந்த நாளை முன்னிட்டு நெற்குன்றம் 145 வதுவட்ட செயலாளர் ப.ஆலன் ஏற்பாட்டில் மதுரவாயல் வடக்கு பகுதி கழக செயலாளரும் மண்டல குழு தலைவருமான நொளம்பூர் வே.ராஜன் தலைமையில் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, அணைவரும் சமத்துவ நாள் உறுதிமொழி ஏற்றனர்.பின்னர் இனிப்புகள் வழங்கி சிறப்பித்தனர் . இந்நிகழ்வில் பகுதி அவை தலைவர் ஆர். கர்னல் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.